1973 நவம்பர் 27]

Licences for manufacture of measuring tapes and weights.

* 446 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Labour be pleased to state—

(a) whether it is a fact that the Government have authorised private parties to manufacture measuring tapes and weights in this State; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : (அ) & (இ) தமிழ்நாடு எடை மற்றும் அளவைகள் சட்டம் விதிகளின்கீழ், வியாபாரத்தில் புழங்கும் எடைக் கற்கள், அளவைகள் முதலியனவற்றைத் தயாரிக்கும் ஒவ்வொருவரும், எடை அளவைகள் கட்டுப்பாடு அதிகாரியிடமிருந்து உரிமம் பெற வேண்டும். இந்த விதிகளின் கீழ், எடை அளவை கட்டுப்பாட்டு அதிகாரி, 1973 ஆம் ஆண்டுக்கு எடைக் கற்கள் தயாரிக்க 21 நபர்கட்கும், அளவைகள் தயாரிக்க 60 நபர்கட்கும் உரிமம் வழங்கியுள்ளார். அளவைகள் என்பது அளக்கும் நாடா உள்ளிட்டதாகும். எனினும், அளக்கும் நாடா மட்டும் தயாரிப்பதற்கென்று எவருக்கும் உரிமம் வழங்கப் படவில்லை.

Chit Funds

* 447 Q.—DR. H. V. HANDE: Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(a) the total number of licences issued to the starting of Chit Funds for the period 1971-72 and 1972-73;

(b) the total number of Chit Funds either liquidated or closed during the period;

(c) the total number of subscribers affected thereby; and

(d) the steps taken by the Government to safeguard the interests of the subscribers?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவர் அவர்களே,

	1971-72.	1972-73.
(அ)	10,993	11,033
(இ)	90	65
(உ)	3,052	1,681

(எ) ஒரு சீட்டு நிதி கலைக்கப்படுகையில் தகுதிப்பெற்ற உரிமை வழக்கு மன்றங்களால் சொத்துக்கள் பகிர்ந்தளிக்கப் படலாம். சீட்டு நிதி மூடப்படுகின்ற தகவல் கிடைக்கப் பெறுவதின் மேல், சீட்டை முறையாக நடத்துவதற்காக, பணத்தைச் சந்தாக்காரர்களுக்குப் பிரித்துக் கொடுப்பதற்காக, அதற்கு வசதியாக சொத்துக்கள் நீதி மன்றங்களுக்குக் கிடைக்கக் கூடியவாறு முடக்கி வைக்கும்படி உடனடியாக ஆணையிடப் படுகிறது.

டாக்டர் எச். வி. ஹாண்டே : அவர்களுக்கு உரிமை வழங்குவதற்கு முன்பாக அவர்களுடைய நிதி நிலைமை எப்படி யிருக்கிறது என்பதை நன்றாக ஆராய்ந்து அதற்குப் பிறகு நிதி நிலைமை சரியான வகையிலே இருந்தால்தான் உரிமம் வழங்க வேண்டுமென்ற முறையைக் கொண்டுவர வேண்டும். அப்படி யில்லாத நிலைமையில் ஆயிரக்கணக்கான சப்ஸ்கிரைப்பர்ஸ் பாதிக்கப்படக்கூடிய நிலைமை ஏற்படும். ஆகவே அவர்களுடைய நலனை உத்தேசித்து அவர்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்கக்கூடிய முறையிலே அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : இப்பொழுது எவ்வளவு தொகை சீட்டில் வழங்குகிறார்களோ அவ்வளவு தொகையில் 50 சதவீதம் வங்கிகளிலும் அரசாங்கப் பத்திரங்களிலும் போட வேண்டுமென்று உத்திரவு இருக்கிறது. ஆனால் இப்பொழுது நூற்றுக்கு நூறு பங்கு அதாவது இரண்டு மடங்கு அசையாத சொத்துக்கள் செக்யூரிட்டியாக இருந்தால்தான் அனுமதிக்கலாம் என்ற முறையைக் கொண்டுவரலாமா என்பது அரசாங்கத்தின் சட்டத் துறையின் ஆலோசனையில் இருக்கிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : சீட்டு என்று சொல்லிக் கொண்டு பலரும் நடத்திக்கொண்டு அதனால் பல சப்ஸ்கிரைப் பர்கள் ஏமாற்றம் அடையக்கூடிய நிலைமை இருப்பதால் அதைத் தவிர்க்கக்கூடிய முறையிலே அரசாங்கமே முழுமையாக செக் யூரிட்டி தொகையை வாங்கிக்கொண்டு சப்ஸ்கிரைப்பர்களுக்கு பாதுகாப்புக் கொடுக்கக்கூடிய முறையிலே ஒரு டெபாஸிட் தொகையை வாங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா ?

1973 நவம்பர் 27]

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : அதைத்தான் நான் முன்பே சொன்னேன். நூற்றுக்கு நூறு தொகையும் அதாவது, பத்தாயிரம் ரூபாய்க்கு அவர்கள் செய்கிறுர்கள் என்றுல் அந்தத் தொகையைப் போல் இரண்டு மடங்கு அளவிற்கு அவர்கள் அசையாத சொத்துக்களுக்கு செக்யூரிட்டி அரசாங்க வங்கிகளிலே கொடுக்கவேண்டும் என்று சொல்லக்கூடிய யோசனை அரசாங்கத்தின் சட்டத் துறையின் ஆலோசனையில் இருக்கிறது என்று சொன்னேன். அது வந்தவுடன் நடவடிக்கை எடுக்கக்கூடிய சூழ்நிலை ஏற்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் எச். வி. ஹாண்டே : அந்த மாதிரி உத்திரவு போடப்பட்டு இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்ஞர்கள். அதற்காக இன்னும் சட்டம் வராமல் இருப்பதால்தான்—நாங்கள் இதைப்பற்றி இரண்டு ஆண்டுகளாகச் சொல்லிக்கொண்டிருக்கிறேம்—சட்டம் வருவதிலே கால தாமதம் ஏற்படுவதால் அதன் காரணமாக சப்ஸ்கிரைப்பர்களுக்கு பாதுகாப்பு இல்லாமல் இருக்கிறது. அரசாங்க உத்திரவை சீட்டுக் கம்பெனிகள் இன்னும் அமல்படுத்தாமல் இருக்கின்றன. இன்னும் பல இடங்களிலே கணக்கு வரவில்லை. எத்தனை கம்பெனிகள் கலைக்கப்பட்டன என்ற சரியான கணக்கும் அவர்களுக்கு வரவில்லை என்று நினைக்கிறேன். இதையெல்லாம் தவிர்க்கக்கூடிய முறையிலே அரசாங்கம் தீவிரமாக உடனடியாக நடவடிக்கை எடுக்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : அவரவர்களுக்கு எந்த எந்த சீட்டுக் கம்பெனிகளில் நம்பிக்கை இருக்கிறதோ அப்படிப்பட்ட கம்பெனிகளில் முதலீடு செய்கிறுர்கள். இப்பொழுது 50 சதவீதம் என்று இருக்கிறது. இந்தச் சீட்டுக்களைப் பொறுத்த வரையில் அரசாங்கமே நடத்தலாமா என்ற யோசனையும் இருந்து வருகிறது. கேரள மாநிலத்திலே அரசாங்கமே அப்படி நடத்திக் கொண்டிருக்கிறுர்கள். நம்முடைய அலுவலர்களை அனுப்பி அங்கே எப்படி நடக்கிறது என்று பார்த்து அங்கே நல்ல முறையிலே நடந்தால் நாமும் அதன்படி நடத்தலாமா என்று யோசனை இருக்கிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி : இப்படி பாதுகாப்பு தருகிற சட்டம் இந்தத் தொடரிலே வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : சட்ட இலாகாவின் பரிசீலனையில் இருக்கிறது, வந்தவுடன் பரிசீலிக்கப்படும்.